மலர் 2 • இதழ் 1 • நவம்பர் 2023 • ரூ.30/-

GEM HOSPITAL

ஜெம் நலம்

இது உங்கள் குடும்ப டாக்டர்

கல்லீரல் நீர்க்கட்டி ஏன்? எப்படி?

வாழ வைக்கும் லேபராஸ்கோபிக்கு ஜே!



முற்றிய நிலையில் வந்தாலும் சிறப்பு சிகிச்சை உண்டு!

புற்றுநோய் சிகிச்சைக்கு புதிய தொழில் நுட்பம்!

புற்றுநோய் என்றாலே உயிர் போய்விடும் என்று அலறியதெல்லாம், பழைய திரைப்படங்களில் இடம்பெறும் காட்சிகளாகிவிட்டன. இன்றைய நவீன தொழில்நுட்பங்கள் மூலம் செய்யப்படும் அறுவை சிகிச்சைகளால் புற்றுநோயை விரைவாகக் குணப்படுத்த முடிவதால், கேன்சரும் சாதாரண நோய்களில் ஒன்றாக இடம்பிடித்துவிட்டது.

பெரும்பாலான புற்றுநோய்கள் ஜீரண மண்டலம், சிறுநீரகம், நுரையீரல், தைராய்டு உள்ளிட்ட உடல் பகுதிகளில் ஏற்படுகிறது. அறுவைசிகிச்சையின் மூலம் அகற்றுதல்தான் பிரதான சிகிச்சை. போதிய விழிப்புணர்வு மற்றும் வசதியின்மை காரணமாக கடந்த காலங்களில் புற்றுநோய் தாமதமாகக் கண்டறியப்பட்டது. அறுவை சிகிச்சையின் மூலம் புற்றுநோயை முழுமையாக அழிக்க முடியாத சூழ்நிலையும் ஏற்பட்டது. அதனால்தான், கீமோ மற்றும் கதிரியக்க சிகிச்சைகள் மேற்கொள்ளப்பட்டன. புற்றுநோயைக் குணப்படுத்துவதற்காக அல்லாமல், நீக்குவதற்காக இச்சிகிச்சைகள் செய்யப்பட்டன. கதிர்வீச்சின் பக்க விளைவுகள் காரணமாக. பல்வேறு பிரச்னைகளால் அவதிப்படும் நிலையும் ஏற்பட்டது. ஆனால், இப்போது நிலைமை அப்படியல்ல!

அதிலும், ஆரம்பநிலை புற்றுநோய் என்பது முற்றிலும் குணப்படுத்தக்கூடியதே! வழக்கமான பரிசோதனைகள் மூலம் ஆரம்பநிலை புற்றுநோயை நம்மால் கண்டறிய முடியும். புற்றுநோயை உண்டாக்கும் சில ஆபத்தான காரணிகளைக் கண்டறிவதன் மூலம், ஆரம்பநிலையிலேயே சிகிச்சையளித்து புற்று வராமல் தடுக்க முடியும்.

வழக்கமான அறுவை சிகிச்சை யிலிருந்து நவீன அறுவை சிகிச்சை எவ்வாறு வேறுபடுகிறது?

வழக்கமான அறுவை சிகிச்சையானது மார்பு அல்லது வயிற்றைத் திறந்து செய்யப்படுகிறது. இரத்த இழப்பு அதிகமாக இருந்தது; தொற்று ஏற்பட்டது; குணமாவதற்கு நிறைய நாள்கள் பிடித்தது. புற்று முழுமையாக அகற்றப்படாததால், அறுவை சிகிச்சைக்குப் பிறகும் மீண்டும் வருவதற்கான வாய்ப்புகள் அதிகம் இருந்தது. தற்போதைய நவீன அறுவை சிகிச்சையில் லேப்ராஸ்கோபிக், ரோபாடிக் உதவியுடன் செய்யப்படும் அறுவை சிகிச்சை என்று இரண்டு வகைகள் இருக்கின்றன. ஹெச்.டி கேமரா சிஸ்டம், 4கே கேமரா, முப்பரிமாண பார்வை ஆகிய தொழில்நுட்பங்களின் மூலம் 10-25 மடங்கு பெரிதாக்கப்பட்ட திசுக்களைப் பார்வையிட லேப்ராஸ்கோபிக் / ரோபாடிக் சர்ஜரி வழிவகை செய்கிறது. மருத்துவர்களின் பார்வைக்கு அப்பாற்பட்ட புற்றுநோய் திசுக்களையும் புற்று பரவலையும் கண்டறிய உதவுகிறது. காயம் தொடர்பான பிரச்னைகள் தவிர்க்கப்படுகின்றன, குறைவான வலி என்பதோடு, விரைவாகக் குணமடைந்து வழக்கமான பணிகளுக்குத் திரும்ப முடிவது மிகப்பெரிய வரப்பிரசாதம்.

Harmonic, Ligasure, Cusa vessel sealant உள்ளிட்ட திறன்மிகு சாதனங்களைப் பயன்படுத்தி இரத்தம் தேவையில்லாத அறுவை சிகிச்சை செய்யப்படுகிறது. புற்று மீண்டும் வருவதற்கான வாய்ப்பு குறைவதோடு, நீண்ட காலம் வாழ்வதற்கும் வழிவகுக்கிறது.

முழு ஹெச்.டி தெளிவு, கம்ப்யூட்டரால் புரோகிராம் செய்யப்பட்ட பரந்த அளவிலான கருவிகளின் இயக்கம், சிறந்த திறமை, நடுக்கம் குறைவு உள்ளிட்டவை ரோபாடிக் உதவி அறுவையின் சிறப்புகள்.

அறுவை சிகிச்சையின் தரத்துக்கு அறுவை சிகிச்சை நிபுணரின் திறமை மிகவும் முக்கியமானது. புற்றுநோய் அறுவை சிகிச்சையிலும் லேப்ராஸ்கோபிக் அறுவை சிகிச்சையிலும் உள்ள அனுபவமும் தகவல் தொழில்நுட்பத்தின் அறிவும்தான் வெற்றிகரமான லேப்ராஸ்கோபிக் மற்றும் ரோபாடிக் புற்றுநோய் அறுவை சிகிச்சைக்கு முக்கியம். கோவை மற்றும் சென்னையில் இயங்கி வரும் ஜெம் மருத்துவமனைகளில் இத்தகைய நவீன தொழில்நுட்பங்கள் மற்றும் கருவிகளைக் கொண்டு அறுவை சிகிச்சைகள் செய்யும் திறன்மிகு மருத்துவர்கள் இருப்பதால், லேப்ராஸ்கோபிக் / ரோபாடிக் சர்ஜரியில் சிறந்து விளங்குகிறது!

GH/21

GEM HOSPITAL

Dr Palanivelu's
Minimal Access Cancer Surgery Centre

45, பங்கஜம் மில் ரோடு, ராமநாதபுரம், கோயம்புத்தூர் – 641 045.
227/2C2, எம்ஜிஆர் ரோடு, பெருங்குடி, சென்னை – 600 095.
Cell : 90039 32323
Email : info@geminstitute.in | Website : www.gemhospitals.com

ஜெம்

மருத்துவமனை



கோவை:
45, பங்கஜா மில் ரோடு,
ராமநாதபுரம், கோவை–641045.
தொடர்புக்கு: 0422 232 5100,
90039 32323
இமெயில்: info@geminstitute.in

சென்னை:
228/2A2, எம்.ஜி.ஆர் ரோடு,
பெருங்குடி, சென்னை–600095.
தொடர்புக்கு: 95851 12326
இமெயில்: chennai@geminstitute.in

சென்னை:
பூந்தமல்லி ஹை ரோடு, அய்யாவு காலனி,
அமைந்தகரை, சென்னை–600029

புதுச்சேரி:
1, Lawspet Mai Road, Pakkamudayapet, Saram,
Puducherry - 605008 Contact: 081225 10173

ஈரோடு:
5, முத்துக்கருப்பணன் தெரு, காந்தி நகர்,
ஈரோடு–638009. தொடர்புக்கு: 0424 4031355,
96007 22555, இமெயில்: gemerode@geminstitute.in

திருச்சூர்:
Gem Hospital,
Ollukkara Village, Paravattani,
Thrissur- 680001, Kerala.
Contact: 0487 2972474, 96332 22500,
இமெயில்: gemthrissur@geminstitute.in

திருப்பூர்:
டி.கே.டி மில்ஸ் பேருந்து நிறுத்தம்,
பல்லடம் மெயின் ரோடு, வீரபாண்டி பிரிவு,
திருப்பூர் – 641 604.
தொடர்புக்கு: 90038 44222
இமெயில்: tirupur@geminstitute.in

ஜெம் மருத்துவமனை சிறப்பு வெளியீடாக வரும் மாத இதழ்

தென்னிந்தியாவில் ஜெம் மருத்துவமனைகள்

வலியும் ரத்த இழப்பும் இல்லாத லேபராஸ்கோபி மற்றும் ரோபோடிக் அறுவை சிகிச்சைகளுக்கான உயர்தர மருத்துவமனை



வயிறு தொடர்பான நோய்களுக்கு உலகத்தரமான சிகிச்சை தரும் சிறப்பு மருத்துவமனை



உறுப்பு மாற்று அறுவை சிகிச்சைகளை நவீன வசதிகளுடன் செய்யும் மருத்துவமனை



புற்றுநோய் அறுவை சிகிச்சைகளுக்கு சிறப்புப்பிரிவு கொண்ட மருத்துவமனை



நலம் அறிவோம்...

மருத்துவத் துறையில்தான் எத்தனை எத்தனை சம்பவங்கள்... தினம் தினம் எத்தனையோ நபர்களைச் சந்திக்க நேர்ந்தாலும் மறக்க முடியாத சில நினைவலைகளை நாம் எப்போதுமே இதயத்தில் வைத்திருப்போம். அவற்றிலும் 'முதல்' தருணங்கள் என்றால், அவை மிக முக்கியமானவை.

கோவை மருத்துவக் கல்லூரியில் நான் முதன்முதலில் அறுவை சிகிச்சை செய்த நாள் இப்போது நினைவுக்கு வருகிறது. ஜெயமேரி... 23 வயது திருமணமாகாத அந்தப் பெண், உணவுக்குழாய் சுருக்கம் மற்றும் அரிப்பு பிரச்னையால் பாதிக்கப்பட்டிருந்தார். அவர் அப்பா மதுவுக்கு அடிமையாகி இருந்ததால், வீட்டில் அப்பாவுக்கும் அம்மாவுக்கும் அடிக்கடி சண்டை நடக்கும். இதனால் வேதனைப்பட்ட ஜெயமேரி, விரக்தியில் பாத்ரூம் கழுவ வைத்திருந்த ஆசிட்டை எடுத்துக் குடித்துவிட்டார். அந்த அமிலத்தின் தாக்கத்தால் உணவுக்குழாயும் குடலும் வெந்துபோய் இருந்தது. மருத்துவமனையில் மூன்று மாதங்களாகச் சிகிச்சை பெற்றாலும், எந்த முன்னேற்றமும் இல்லை. நாளுக்கு நாள் உடல் நலிந்து கிட்டத்தட்ட எலும்பும் தோலுமாக இருந்தார் அவர். எங்கள் பிரிவின் தலைமைப் பொறுப்பு வகித்த பேராசிரியர் கே.எம்.நித்யானந்தன் ஒருநாள் என்னிடம் ஜெயமேரியைச் சுட்டிக்காட்டிக் கவலையுடன் சொன்னார். "பழனிவேலு, இந்தப் பெண்ணின் நிலையைப் பாருங்கள். நீங்கள் அறுவை சிகிச்சையில் உயர்கல்வி முடித்து சிறப்புத் தகுதி பெற்றுள்ளீர்கள். ஏதாவது செய்து அவர் உயிரைக் காப்பாற்றுங்கள்."

நான் ஜெயமேரிக்கு அறுவை சிகிச்சை செய்ய ஒப்புக்கொண்டேன். ஆனால் அவரது உடல்நிலை மோசமாக இருந்ததால், 'அவருக்கு மயக்க மருந்து கொடுப்பது உயிருக்கே ஆபத்தாகிவிடும்' என மயக்க மருந்து நிபுணர்கள் தயங்கினர். மருத்துவக் கல்லூரியின் மயக்க மருந்துத் துறைத் தலைவர் பேராசிரியர் சிவகாமியை உதவிக்கு அழைத்தேன். அவர் வந்து ஜெயமேரிக்கு மயக்க மருந்து கொடுக்க, நான் அறுவை சிகிச்சை செய்தேன். பெருங்குடலில் ஒரு பகுதியை வெட்டி எடுத்து, அரித்துப் போயிருந்த உணவுக்குழாய்க்கு மாற்றாகப் பொருத்தினேன்.

அறுவை சிகிச்சை முடிவதற்கு 4 மணி நேரம் ஆனது. ஜெயமேரியின் ரத்தத்தில் ஆல்புமின் அளவு 2.2 மில்லி கிராம் மட்டுமே இருப்பதால், அறுவை சிகிச்சை புண் சீக்கிரம் ஆறாது. அதை உயர்த்த வேண்டும். அறுவை சிகிச்சை முடிந்ததும், எனது முதுநிலை மாணவர் ஒருவரை அழைத்துக்கொண்டு மருத்துவமனை அருகிலுள்ள சரவணா பார்மஸிக்குச் சென்றேன். அப்போது ஒரு பாட்டில் ஆல்புமின் விலை ரூ.3,500. அந்த நேரத்தில் அது பெரிய தொகை. என்றாலும், அந்தப் பெண்ணின் உயிர் விலைமதிப்பற்றது. என்ன செய்தாவது அவரைக் காப்பாற்றத் தீர்மானித்தேன். என் சொந்த செலவில் ஒரு பாட்டில் ஆல்புமின் வாங்கி, என் மாணவரிடம் கொடுத்து ஜெயமேரிக்குச் செலுத்தச் சொன்னேன். ரத்தத்தில் நூறு மி.லி.க்கு 3 கிராம் என்ற அளவுக்கு ஆல்புமின் வந்தால்தான் ஜெயமேரியின் உயிரைக் காப்பாற்ற முடியும். அதற்கு இன்னும் இரண்டு யூனிட் ஆல்புமின் அவருக்குச் செலுத்த வேண்டும். நல்லவேளையாக மருத்துவக் கல்லூரி டீன் டாக்டர் சுசீலா ராஜ் விடுப்பிலிருந்து திரும்பினார். அவர் உடனடியாக இரண்டு பாட்டில் ஆல்புமின் வழங்க அனுமதி அளித்தார். நான் நிம்மதிப் பெருமூச்சு விட்டேன்.

அறுவை சிகிச்சை முடிந்த நான்காவது நாள் இன்னொரு



பிரச்னை எழுந்தது. வீட்டருகே இருந்தவர்களுடன் நடைபெற்ற ஒரு தகராறில் ஜெயமேரியின் அப்பா கொலை செய்யப்பட்டார். அதுவரை மருத்துவமனையில் ஜெயமேரியைக் கவனித்துக்கொண்டிருந்த அவரின் அம்மா, தன் கணவரின் உடலை வாங்கி இறுதிச்சடங்கு செய்வதற்காகச் சென்றுவிட்டார். எல்லோரும் ஜெயமேரியின் துயரநிலையைப் பார்த்துப் பரிதாபப்பட்டனர். ஆனால், அவரைப் பார்த்துக்கொள்ளத்தான் யாரும் இல்லை. மருத்துவமனையில் பயிற்சிக்காக வந்திருந்த செவிலியர் மாணவிகள் சிலரை அழைத்து, அவர்களிடம் அந்தப் பொறுப்பைக் கொடுத்தேன். அவர்களில் மாலதி என்ற பயிற்சி நர்ஸ் சிறப்பாகத் தன் பணியைச் செய்தார். ஜெயமேரி மீது மிகுந்த அக்கறை எடுத்துக்கொண்டார். இரண்டு வாரங்களுக்குப் பிறகு ஜெயமேரி டிஸ்சார்ஜ் செய்யப்பட்டார்.

ஒரு மாதம் கழித்து ஜெயமேரி வழக்கமான பரிசோதனைகளுக்காக மருத்துவமனைக்கு வந்தார். ஆனால், அவரை யாருக்கும் அடையாளம் தெரியவில்லை. புறநோயாளிகள் பிரிவில் பெரும் கூட்டமாகக் காத்திருக்கும் நோயாளிகளில் ஒருவராகவே அவரை நினைத்தார்கள். வரிசையில் காத்திருந்து, தனக்கான முறை வந்ததும் அவர் டாக்டர்களிடம் சென்று தன்னை அறிமுகம் செய்துகொண்டார். 'உணவுக்குழாய் புதிதாக வைத்து அறுவை சிகிச்சை செய்யப்பட்ட ஜெயமேரி நான்தான்.' டாக்டர்கள் நம்ப முடியாமல் திகைத்துவிட்டார்கள். அதன்பிறகே அவரை அடையாளம் கண்டுகொண்டார்கள். எல்லோரும் அவரின் உடல்நலனை விசாரித்தனர். 'இனி பிழைக்கவே மாட்டார்' எனத் தீர்மானிக்கப்பட்ட ஜெயமேரியிடம், அறுவை சிகிச்சை முடிந்த 30 நாட்களில் ஆச்சர்யமான மாற்றங்கள் நிகழ்ந்திருந்தன. உடல் எடை கணிசமாகக் கூடியிருந்தது. நல்ல ஆரோக்கியத்துடன் காணப்பட்டார். நான் புறநோயாளிகள் பிரிவுக்குப் போனபோது, மகிழ்ச்சியும் நிறைவுமாக ஜெயமேரி என்னிடம் நன்றி சொன்னார். பேராசிரியர் நித்யானந்தன் என் கைகளைப் பற்றிக்கொண்டு, "இந்தப் பெண்ணைப் பாருங்கள் பழனிவேலு! அற்புதமாக மாறியிருக்கிறார். வாழ்த்துகள்!" என்றார்.

ஜெயமேரி இவ்வளவு விரைவில் இயல்புநிலைக்குத் திரும்பியதைப் பார்த்து நான் பரவசம் அடைந்தேன். மிக முக்கியமாக, அவர் மிகுந்த நம்பிக்கையுடன் வாழ்க்கையை அணுகினார். அதன்பின் அவருக்குத் திருமணமாகி, முதல் குழந்தையை எங்கள் கோவை மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில்தான் பெற்றெடுத்தார். குழந்தையைக் கையில் ஏந்தியபடி தன் கணவருடன் என்னை வந்து சந்தித்து ஜெயமேரி நன்றி சொன்னார். அப்போது எனக்கு ஏற்பட்ட நிறைவையும் மகிழ்ச்சியையும் எந்தப் பதவி உயர்வும் தந்திருக்க முடியாது!

அன்புடன்

டாக்டர் சி.பழனிவேலு

தலைவர், ஜெம் மருத்துவமனை

GEM HOSPITAL

ஜெம்நலம்

மலர் 2 இதழ் 1
நவம்பர் 2023

கௌரவ ஆசிரியர்
டாக்டர் சி.பழனிவேலு

பதிப்பாளர்
டாக்டர் எஸ்.அசோகன்

ஆசிரியர்
த.செ.ஞானவேல்

இதழாசிரியர்
வள்ளி

புத்தக ஆக்கமும் வடிவமைப்பும்:
தரு மீடியா (பி) லிட்.,
10/55, ராஜ் தெரு,
மேற்கு மாம்பலம்,
சென்னை - 600 033
தொலைபேசி : 9952920801

இந்தப் புத்தகத்தின் எந்த ஒரு பகுதியையும் பதிப்பாளரின் எழுத்துப்பூர்வமான முன் அனுமதி பெறாமல் மறுபிரசுரம் செய்வதோ, அச்சு மற்றும் மின்னணு ஊடகங்களில் மறுபதிப்பு செய்வதோ காப்புரிமைச் சட்டப்படி தடை செய்யப்பட்டதாகும்.

Published by Dr. S.ASOKAN

Gem Hospital Institute of Gastroenterology & Laparoscopy,
45, Pankaja Mill Road, Ramanathapuram,
Coimbatore - 641045.
Ph: 0422 2325100
email: info@geminstitute.in

இந்த இதழில் இடம்பெற்றுள்ள தகவல்கள் அனைத்தும், உரிய நிபுணர்களின் ஆலோசனை பெற்று கவனத்துடனும் அக்கறையுடனும் கொடுக்கப்பட்டுள்ளன. எனினும் உடல்நிலை, சூழல், வயது மற்றும் வாழ்க்கைமுறை போன்றவற்றைப் பொறுத்து ஒவ்வொருவருக்கும் மருத்துவ ஆலோசனைகள் மற்றும் சிகிச்சைகள் மாறுபடலாம். எனவே, இதழில் கொடுக்கப்பட்டுள்ள தகவல்களைத் தாண்டி, மருத்துவரின் ஆலோசனையைப் பெற்றே சிகிச்சை மற்றும் பயிற்சியை எடுத்துக்கொள்ள வேண்டும்.



கல்லீரல் நீர்க்கட்டி ஏன்? எப்படி?

ஈரலில் வரக்கூடிய நீர்க்கட்டிகள் எத்தனையோ இருந்தாலும் கல்லீரல் நீர்க்கட்டி (hydatid cyst liver) எனப்படும் புழுவினால் வரக்கூடிய நீர்க்கட்டிகளையே அதிகமாகப் பார்க்க முடிகிறது. இவை மிகவும் மோசமான நீர்க்கட்டிகள். சாதாரண நீர்க்கட்டிகள் மிகவும் பெரிதாகும் பட்சத்தில்தான் அறுவை சிகிச்சை செய்ய நேரிடும். ஆனால், கல்லீரல் நீர்க்கட்டிகளுக்குச் சரியான மருத்துவச் சிகிச்சையை அளிக்க வேண்டும்.

நீர்க்கட்டிகள் எப்படி வருகின்றன?

நாம் வீட்டில் வளர்க்கக்கூடிய நாய், பசு, எருமை அல்லது வீட்டில் வளர்க்கக்கூடிய பிற விலங்குகளிடமிருந்தும் செல்லப் பிராணிகளிடமிருந்தும் இந்தப் புழு நமக்கு ஒட்டி, அதனால் ஈரலில் நீர்க்கட்டி ஏற்படலாம். இதற்கு ஈரல் நீர்க்கட்டிகள் (hydatid cyst liver) என்று பெயர்.

கல்லீரல் நீர்க்கட்டி வாழ்க்கை சுழற்சி?

இந்தக் கட்டி ஒருவரைப் பாதிக்கிறது என்றால், அந்த மனிதரின் வாழ்க்கைச் சுழற்சியில் ஒரு குறிப்பிட்ட பகுதியை அந்தப் புழு செலவிடுகிறது. அந்தச் செலவிடும் நேரத்தில் அந்தப் புழு, ஈரலுக்குச் சென்று பாதிப்பை ஏற்படுத்துகிறது. ஈரலில் தோன்றக்கூடிய தொற்றுநோயான hydatid cyst காரணமாக ஒரு நீர்க்கட்டி ஏற்பட்டு, அதனால் ஈரல் பாதிப்பு உண்டாகலாம்.

சிகிச்சை முறை?


ஈரலில் எந்தப் பகுதியில் வேண்டுமானாலும் நீர்க்கட்டி உருவாகும். உருவான நீர்க்கட்டியைத் திறந்து அறுவை சிகிச்சை செய்து, கட்டியை முழுவதுமாகத் துண்டித்து எடுத்து, அதற்குப் பிறகு ஈரலைச் சரிசெய்ய வேண்டும். லேபராஸ்கோபி சிகிச்சை முறை வந்த பிறகு இந்தப் பிரச்னைக்கு எளிதில் சிகிச்சை அளிக்கலாம். அப்படிச் செய்யக்கூடிய சிகிச்சைதான் Palanivelu hydatid trocar system என்பது. ஜெம் மருத்துவமனையின் தலைவர் டாக்டர் பழனிவேலு கண்டுபிடித்த ஒரு கருவி மூலமாக இச்சிகிச்சை செய்யப்படுகிறது.

Palanivelu hydatid trocar system சிகிச்சையின் முக்கியமான அம்சங்கள் என்ன?

கட்டியைச் சிந்தாமல் சிதறாமல் அப்படியே இந்தக் கருவி எடுக்கும். ஒருவேளை கட்டி கொஞ்சம் சிதறினாலும்,



டாக்டர் ப.செந்தில்நாதன்
இரைப்பை, குடலியல் மற்றும் புற்றுநோய் அறுவை சிகிச்சை நிபுணர்
ஜெம் மருத்துவமனை, சென்னை



நாம் வீட்டில் வளர்க்கக்கூடிய நாய், பசு, எருமை அல்லது வீட்டில் வளர்க்கக்கூடிய பிற விலங்குகளிடமிருந்தும் செல்லப் பிராணிகளிடமிருந்தும் இந்தப் புழு நமக்கு ஒட்டி, அதனால் ஈரலில் நீர்க்கட்டி ஏற்படலாம்.

மீண்டும் உருவாகிப் பெரிதாகும். கட்டி எங்கேயாவது சிதறியிருந்தால் 6 மாதம் அல்லது ஒரு வருடத்தில் அங்கிருந்து சிறிய விதை விதைத்து வளர்ந்து வருவது போல ஈரலில் அல்லது வயிற்றின் மற்ற பகுதிகளில் மீண்டும் உருவாகும். அதனால், நீர்க்கட்டியைச் சிந்தாமல் சிதறாமல் துண்டித்து எடுக்கக்கூடிய அந்தக் கருவிதான் Palanivelu hydatid trocar system.

வயிற்றின் சிறுதுளை மூலம் ஈரலினுள் அந்தக் கருவியைச் செலுத்தி daughter cyst என்று சொல்லக்கூடிய அனைத்து நீர்க்கட்டிகளையும் சிந்தாமல் துண்டித்து எடுப்பதுதான் இந்தச் சிகிச்சை. இந்தச் சிகிச்சை முறை வந்த பிறகு, கல்லீரலைத் துண்டித்து எடுக்கக்கூடிய சிகிச்சை முறை அறவே ஒழிந்துவிட்டது. காரணம், கல்லீரலைத் துண்டிக்காமலேயே hydatid cyst என்ற நீர்க்கட்டியை மட்டுமே முழுவதுமாக உறிஞ்சி எடுக்க முடிகிறது. பெரிய அறுவை சிகிச்சை செய்து கல்லீரலைத் துண்டித்தால் என்ன பலன் கிடைக்குமோ அதே பலன் கல்லீரலைத் துண்டிக்காமலே லேபராஸ்கோப் மூலம் Palanivelu hydatid trocar system சிகிச்சை செய்யும் போது கிடைக்கிறது.

திறந்த அறுவை சிகிச்சை செய்து கல்லீரலைத் துண்டித்து எடுக்கக்கூடிய சிகிச்சையில் நோயாளி குணமடைய 15 நாள் கால அவகாசம் தேவை. லேபராஸ்கோப் மூலம் Palanivelu hydatid trocar system சிகிச்சையில் நோயாளி குணமடைய 2 நாட்கள் மட்டுமே ஆகும். மேலும், இதில் வலி இல்லை, மருத்துவமனையில் நீடித்து தங்க வேண்டிய அவசியமில்லை. சிகிச்சை முடிந்த 3 நாட்களிலேயே இயல்பு நிலைக்குத் திரும்பி அவர்களின் அன்றாட வேலைகளை மேற்கொள்ளலாம். இப்படி hydatid cyst பிரச்னைக்காகக் கிடைத்த ஒரு வரப்பிரசாதமே இந்தச் சிகிச்சை முறை!



கல்லீரலில் கட்டியைத் துண்டித்து எடுக்கும்போது அதிக ரத்த சேதாரம் ஏற்படும். அதற்கு மாறாக நேரடியாக trocar கருவியை நீர்க்கட்டிக்குள் மட்டும் செலுத்திக் கட்டியைத் துண்டிப்பதால் கல்லீரலுக்கு எவ்விதப் பாதிப்பும் ஏற்படாது. கல்லீரல் அறுவை சிகிச்சையால் ஏற்படக்கூடிய ரத்தப்போக்கை முழுவதுமாகத் தவிர்க்கலாம். அதுமட்டுமல்ல... நேரடியாக கேமராவை உட்செலுத்திப் பார்ப்பதால், பித்தத்திற்கும் கல்லீரலுக்கும் தொடர்பு இருக்கிறதா, அதற்கு ஏதேனும் தையல் போட வேண்டுமா, பிற்காலத்தில் அதனால் ஏதேனும் பாதிப்பு ஏற்படுமா, இன்னும் அதற்குச் சிகிச்சை அளிக்க வேண்டுமா என்பதையும் சோதித்துப் பார்க்கலாம்.

திறந்த அறுவை சிகிச்சையின்போது சில நேரம் சிறுசிறு இணைப்புகளைத் தவறவிட்டிருப்போம். அதை மிகவும் துல்லியமாக 4K, 3D லேபராஸ்கோபி கேமரா மூலம் பார்ப்பதால் சிறுசிறு இணைப்புகள் இருந்தாலும், அதைச் சரி செய்யக்கூடிய வாய்ப்பும் இந்தச் சிகிச்சையில் இருக்கிறது.

திறந்த அறுவை சிகிச்சைக்குப் பயந்து கொண்டிருந்த காலம் மாறி, தற்போது குறைந்தபட்ச ஆக்கிரமிப்பு அறுவை சிகிச்சை மூலமாகவும், குறிப்பாக Palanivelu hydatid trocar system மூலமாகவும் சிகிச்சை முறையை மேற்கொள்வதால் எவ்வித ரத்த சேதாரமும் இல்லாமல் சுலபமாக இந்த அறுவை சிகிச்சையை முடித்து வீடு திரும்பலாம். ●



உடற்பயிற்சி செய்யாமலிருக்க காலநிலையைக் காரணம் காட்டலாமா?

தமிழ்நாட்டில் இப்போது மழையும் குளிரும் நிறைந்த மாதங்களில் இருக்கிறோம். பொதுவாக வெப்பமான காலநிலையில் இருந்து இந்தக் காலநிலைக்கு வருவதில் புத்துணர்ச்சியூட்டும் மாற்றத்தை கொண்டு வருவது அவசியம். சுறுசுறுப்பாக இருப்பது மற்றும் உடல் செயல்பாடுகளில் ஈடுபடுவது உடல் மற்றும் மனநலம் ஆகிய இரண்டுக்கும் அவசியம். இந்த மிதமான குளிர்காலத்தில் ஆரோக்கியத்தை மேம்படுத்துவதற்கான பல்வேறு சுவாரஸ்யமான செயல்பாடுகளை ஆராய்வதற்கான சிறந்த வாய்ப்பைப் பயன்படுத்திக்கொள்வோம்.

காலை நடை மற்றும் ஜாகிங்

குளிர்கால காலை வேளையானது விறுவிறுப்பான நடைப்பயிற்சி மற்றும் ஜாகிங் செய்வதற்கு ஏற்றது. சூரியன் மெதுவாகவே உங்கள் சுற்றுப்புறத்தை வெப்பமாக்குவதால், பூங்கா அல்லது கடற்கரையோரம் நடப்பது அன்றைய தினத்துக்கு அமைதியான தொடக்கமாக இருக்கும்.

சைக்கிள் பயணங்கள்

ஒரு சைக்கிளில் சுற்றுப்புறங்கள் அல்லது கிராமப்புறங்களில் உலா வருவது ஊக்கமளிக்கக்கூடிய ஒரு செயல்பாடு. இந்த இதமான வானிலை நீண்ட தூர சைக்கிள் பயணங்களையும் மகிழ்ச்சிகரமான அனுபவமாக மாற்றுகிறது.

வெளிப்புற விளையாட்டு

கிரிக்கெட், பேட்மிண்டன், கால்பந்து போன்ற விளையாட்டுகளில் ஈடுபடுவது சுறுசுறுப்பாக இருக்க ஒரு வேடிக்கையான வழியாகும். சமூக உணர்வை வளர்க்கும் வகையில் குடும்பத்தினரும் நண்பர்களும் இணைந்து வார இறுதி போட்டிகளை ஏற்பாடு செய்யலாம்.

இயற்கைப் பாதைகள் மற்றும் மலையேற்றங்கள்

மலையேற்றம் மற்றும் இயற்கை நடைப்பயணங்களுக்குப் பல இயற்கையான பாதைகளை நம் தமிழ்நாடு வழங்குகிறது. மேற்குத் தொடர்ச்சி மலைகளை ஆராய்வது அல்லது பறவைகளைப் பார்க்கும் உல்லாசப் பயணங்களில் ஈடுபடுவது கல்வி மற்றும் சுறுசுறுப்பான பொழுதுபோக்கு நோக்கங்களாக இருக்கும்.



உடலையும் மனதையும் உற்சாகப்படுத்துங்கள்

யோகா மற்றும் தியானம்

யோகா மற்றும் தியானத்தைப் பயிற்சி செய்வது குறிப்பாக குளிர்காலத்தில் நன்மை பயக்கும். நெகிழ்வுத்தன்மை மற்றும் மன அமைதியை உறுதி செய்யும். 'சூரிய நமஸ்காரங்கள்' போன்ற வெப்பத்தை உருவாக்கும் ஆசனங்களைச் சேர்ப்பது உற்சாகமாக்கத்தை அதிகரிக்கும்.

நடனம் மற்றும் ஏரோபிக்ஸ்

நடன வகுப்புகளில் இணைவது அல்லது வீட்டிற்குள் ஏரோபிக் பயிற்சிகளில் ஈடுபடுவது சுறுசுறுப்பாக இருக்க மற்றுமோர் உற்சாகமான வழியாகும். பரத நாட்டியம் போன்ற பாரம்பரிய நடன வடிவங்கள் கலாசாரம் மற்றும் உடற்பயிற்சியின் சிறந்த இணைப்பாக இருக்கும்.



ஸ்கிப்பிங், படிக்கட்டுகளில் ஏறுதல், எளிய ஓர்க்அவுட் நடைமுறைகளைப் பின்பற்றுதல் உள்ளிட்ட வீட்டு அடிப்படையிலான பயிற்சிகள் மழை மற்றும் குளிர் காலத்துக்கு ஏற்றவை.

ஜிம் உடற்பயிற்சிகள்

வலிமைப் பயிற்சி, கார்டியோ மற்றும் நெகிழ்வுத்தன்மை ஆகியவற்றில் கவனம் செலுத்தும் ஜிம் அமர்வுகள் வாயிலாக ஓர் ஆரோக்கியமான உடற்பயிற்சி முறையை உறுதிப்படுத்த முடியும்.

வீட்டு உடற்பயிற்சிகள்

ஸ்கிப்பிங், படிக்கட்டுகளில் ஏறுதல் அல்லது ஆன்லைன் ஓர்க்அவுட் நடைமுறைகளைப் பின்பற்றுதல் உள்ளிட்ட எளிய வீட்டு அடிப்படையிலான பயிற்சிகள் வசதியாகவும் பயனுள்ளதாகவும் இருக்கும்.

மனம் – உடல் நடைமுறைகள்

Tai Chi போன்ற நடைமுறைகள் உடல் மற்றும் மன ஆரோக்கியத்துக்கான சமநிலையான அணுகுமுறைக்கு உகந்தவை.

பாரம்பரிய தற்காப்புக் கலைகள்

'சிலம்பம்' போன்ற பாரம்பரியத் தற்காப்புக் கலைகளைக் கற்றுக்கொள்வது, ஆரோக்கியமாக இருப்பதற்கு வளமான வழியாகும்.

சிகிச்சை நடைமுறைகள்

மசாஜ் சிகிச்சை அல்லது பிசியோதெரபி பயிற்சிகள் போன்ற நடைமுறைகளில் ஈடுபடுவதன் மூலம் ஒட்டுமொத்த உடல் ஆரோக்கியத்தை உறுதிப்படுத்த முடியும்.



சமூக விளையாட்டு நிகழ்ச்சிகள்

உள்ளூர் விளையாட்டு நிகழ்ச்சிகள் அல்லது மராத்தான்களில் பங்கேற்பது சமூக உணர்வை வளர்க்கும்; உற்சாகத்தை உயர்த்தும்.

தொண்டுப் பணிகள்

பொது இடங்களைத் தூய்மைப்படுத்துதல் அல்லது மரம் நடும் இயக்கங்கள் போன்ற தன்னார்வப் பணிகளில் ஈடுபடுவது சமூகப் பொறுப்புணர்வு மற்றும் உடல் ரீதியாகப் பயனளிப்பதாக இருக்கும்.

கலாசார நடவடிக்கைகள்

கலாசார விழாக்கள், ஊர்வலங்கள் மற்றும் நடன நாடகங்களில் பங்கேற்பது கலாசார மரபுகளை உயிர்ப்புடன் வைத்திருக்கின்றன.

ஆரோக்கியமான உணவு

பருவகாலப் பழங்கள், காய்கறிகள் மற்றும் போதுமான நீர்ச்சத்து ஆகியவற்றை உள்ளடக்கிய சத்தான உணவுடன் உடல் செயல்பாடுகளை மேற்கொள்வது முக்கியமானது.

ஓய்வு மற்றும் புத்துணர்ச்சி

போதுமான ஓய்வு மற்றும் சரியான தூக்கத்தை உறுதிசெய்வது, உடலை மீட்டெடுக்கவும், புத்துணர்ச்சி பெறவும் சமமாக முக்கியம்.

குளிர்காலத்தில் சுறுசுறுப்பாக இருப்பது என்பது பாரம்பரிய விளையாட்டுகள் முதல் வெளிப்புற விளையாட்டுகள் வரை ஒவ்வொன்றிலும் ஆரோக்கியம் மற்றும் நல்வாழ்வின் உணர்வை வளர்ப்பதற்கு உதவுகிறது. ஒருவரின் வாழ்க்கை முறைக்கு ஏற்ற சமநிலையைக் கண்டறிவதில் இந்தக் காலகட்டம் முக்கியமானது. அதே நேரத்தில் பருவத்தின் வரங்களை ஆராய்ந்து அனுபவிக்கும் வாய்ப்பையும் நாம் பயன்படுத்த முடியும். இந்த நடைமுறைகளை ஒருங்கிணைப்பதன் மூலம் குளிர்கால மாதங்கள் வெறும் உடல் செயல்பாடுகளின் நேரமாக இல்லாமல் மகிழ்ச்சி, கலாசாரக் கொண்டாட்டம் மற்றும் முழுமையான நல்வாழ்வின் பருவமாக இருப்பதை நாம் உறுதிசெய்ய முடியும். ●



ஜெம் மருத்துவமனையில் நோய்த்தொற்று கட்டுப்பாடு

ஜெம் மருத்துவமனைகளில், நோயாளிகள் மற்றும் அவர்களைக் கவனித்துக்கொள்ளும் ஊழியர்கள் என இரு தரப்பினருக்கும் தொற்றுநோயைத் தடுப்பதும் கட்டுப்படுத்துவதும் ஒரு பொறுப்பு மட்டுமல்ல... அது ஒரு முழுமையான தார்மீக அர்ப்பணிப்பு. இதை நன்கு உணர்ந்துள்ளதால், நாங்கள் எப்போதும் வலுவான தொற்றுக் கட்டுப்பாட்டுத் திட்டத்தைப் பின்பற்றுகிறோம். எனவே, ஜெம் மருத்துவமனை குழுமத்திலுள்ள ஒவ்வொரு மருத்துவமனையிலும் ஒரு விரிவான தொற்றுத் தடுப்பு மற்றும் கட்டுப்பாட்டுத் திட்டம் உள்ளது.

ஜெம் மருத்துவமனையின் தொற்றுக் கட்டுப்பாட்டுத் திட்டம், கை சுகாதாரம், தனிமைப்படுத்தல், தொழில்சார் ஆரோக்கியம், தொற்று நோய்கள் குறித்த அறிவிப்பு, மருத்துவ மாதிரி சேகரிப்பு, தொற்றுத் தடுப்பு, ஆன்டிபயாடிக் பயன்பாடு மற்றும் பார்வையாளர்கள் மற்றும் நடைமுறை அமைப்புகளில் சுற்றுச்சூழல் சுகாதாரம் பற்றிய கொள்கைகளை உள்ளடக்கியது.

எங்கள் தொற்றுக் கட்டுப்பாட்டுத் திட்டம், மருத்துவமனையில் ஏற்படக்கூடிய நோய்த்தொற்றுகளைத் தடுப்பதிலும் கவனம் செலுத்துகிறது, குறிப்பாக அறுவை சிகிச்சை காயத் தொற்றுகள், வென்டிலேட்டருடன் தொடர்புடைய நோய்த்தொற்றுகள், UTI மற்றும் பிற தொற்று நோய்கள் உள்பட பல்வேறு தொற்றுகளைக் கட்டுப்படுத்துதலில் ஈடுபட்டு வருகிறோம்.

எங்கள் கொள்கைகள் மற்றும் வழிகாட்டுதல்கள் மருத்துவ அறிவியல் ஆதாரங்களை அடிப்படையாகக் கொண்டவை. அதோடு, அவை தேசிய, சர்வதேச நிறுவனங்கள் மற்றும் சமூகங்களின் தற்போதைய அறிவியல் அறிவு மற்றும் பரிந்துரைகளையும் பிரதிபலிக்கின்றன.

ஜெம் மருத்துவமனைகளின் தொற்றுக் கட்டுப்பாட்டுத் திட்டம், நோய்கள் மற்றும் நுண்ணுயிர் கண்காணிப்பு தொடர்பான தகவல் நிர்வாகத்தால் நன்கு கண்காணிக்கப்படுகிறது. மதிப்பீடு மற்றும் தரக் கட்டுப்பாட்டை மேற்கொள்வதற்காக அவ்வப்போது தணிக்கை செய்வதற்கான வழிகாட்டுதல்களையும் இத்திட்டம் வழங்குகிறது.

நோயாளியின் தொற்று அபாயத்தைக் குறைப்பதற்கும் பாதுகாப்பை உறுதி செய்வதற்கும் மருத்துவர்கள் மற்றும் சுகாதாரப் பணியாளர்களுக்கு வழிகாட்டுவதே இத்திட்டத்தின் ஒட்டுமொத்த நோக்கம்.

திட்டத்தின் முக்கிய அம்சங்கள்

தொற்றுக் கட்டுப்பாட்டுத் தரவுகளைக் கண்காணித்தல்

ஜெம் மருத்துவமனைகள் குழுமத்திலுள்ள ஒவ்வொரு மருத்துவமனையும் தொற்றுக் கட்டுப்பாட்டு அளவுகளை

டாக்டர் ரகுநாத்
MBBS, MD, FICM, PGDHS
தொற்றுக் கட்டுப்பாட்டு அதிகாரி / தீவிர சிகிச்சை நிபுணர்
ஜெம் மருத்துவமனை, கோயம்புத்தூர்



மாதந்தோறும் கண்காணிக்கின்றன, இவற்றின் தரநிலைகள் மற்றும் மாறுபாடுகளின் மதிப்புகள் முழுமையாகப் பகுப்பாய்வு செய்யப்படுகின்றன. தொற்று விகிதங்களை வெளியிடுவது என்பது வெளிப்படைத்தன்மை, தொற்று தொடர்பான தரவுகளை உன்னிப்பாகக் கடைப்பிடிப்பது மற்றும் மேம்படுத்தும் நோக்கத்துடன் மேற்கொள்ளப்பட்ட முழுமையான தணிக்கை மற்றும் பகுப்பாய்வு ஆகியவற்றைக் குறிக்கிறது.

சுகாதாரப் பணியாளர்களின் பாதுகாப்பை உறுதிசெய்வதற்கான நிலையான உலகளாவிய முன்னெச்சரிக்கைகள்

உலகளாவிய மற்றும் நிலையான முன்னெச்சரிக்கை நடைமுறைகள் கடுமையாகப் பின்பற்றப்படுகின்றன. கற்பித்தலும் பயிற்சி வழிமுறைகளும் அனைத்து ஊழியர்களுக்கும் குறிப்பிட்ட கால இடைவெளிகளில்



நடத்தப்படுகின்றன. நிலையான முன்னெச்சரிக்கைகள், கை சுகாதார நடைமுறைகள் போன்ற முக்கியத் தொற்றுக் கட்டுப்பாட்டு விதிமுறைகள் முழுமையாக அறிவுறுத்தப்படுகின்றன. ஜெம் மருத்துவமனைகளில் உள்ள ஊழியர்களின் சுகாதாரக் கொள்கையானது, அனைத்துப் பணியாளர்களுக்கும் தடுப்பூசி போடப்படுவதையும் வெரிசெல்லா, ஹெபடைடிஸ் B க்கு நோய் எதிர்ப்பு சக்தி உள்ளதையும் உறுதிசெய்கிறது. உணவு வகைகளைக் கையாளுபவர்களும் தொடர்ந்து பரிசோதிக்கப்படுவதுடன், அவர்களுக்குத் தகுந்த தடுப்பூசியும் அவ்வப்போது அளிக்கப்படுகிறது.

கை சுகாதார முன்முயற்சி

ஜெம் மருத்துவமனைகள் அனைத்து நோயாளிப் பராமரிப்புப் பகுதிகளிலும் பாதுகாப்பான நீர் விநியோகத்தை உறுதிசெய்கின்றன. அனைத்து நோயாளிப் படுக்கைகளிலும் ஆல்கஹால் அடிப்படையிலான கை தேய்த்தல்கள் வைக்கப்படுகின்றன. ஜெம் குழுமத்தில் உள்ள அனைத்து மருத்துவமனைகளும் நோயாளிகளின் பராமரிப்புப் பகுதிகளில் கை சுகாதாரத்தை முழுமையாகக் கடைப்பிடிப்பதை உறுதி செய்வதற்காக அவ்வப்போது கண்காணிப்பு தணிக்கைகளை மேற்கொள்கின்றன.

மருத்துவ நடைமுறை வழிகாட்டுதல்கள் மற்றும் நெறிமுறைகளின் பயன்பாடு

வடிகுழாய்கள், ரத்தக்குழாய் சாதனங்கள், பிற ஆக்கிரமிப்பு சாதனங்களின் பயன்பாடு மற்றும் பராமரிப்புக்கான கடுமையான வழிகாட்டுதல்களை எங்கள் எல்லா மருத்துவமனைகளும் பின்பற்றுகின்றன. கருவிகள், ICUகள் மற்றும் அறுவை சிகிச்சை அறைகளுக்கான ஏர் கண்டிஷனிங், ஊசி குச்சி காயங்கள் மற்றும் ரத்தக்கசிவை நிர்வகித்தல் உள்பட கிருமி நீக்கம் போன்றவற்றில் சர்வதேச நெறிமுறைகளைப் பின்பற்றுகிறோம். எங்களிடம் முழுமையான ஆய்வகப் பாதுகாப்புத் திட்டம் மற்றும் கழிவு மேலாண்மைக் கொள்கை உள்ளது.

ஆன்டிபயாடிக் மேற்பார்வை திட்டம்

அண்மைக் காலங்களில் கண்மூடித்தனமான நுண்ணுயிர் எதிர்ப்பிகளின் (ஆன்டிபயாடிக்) பயன்பாடு காரணமாக ஆன்டிபயாடிக் எதிர்ப்பு நிகழ்வுகள் படிப்படியாக அதிகரித்து வருகின்றன. ஆன்டிபயாடிக் எதிர்ப்பு என்பது ஓர் உலகளாவிய நிகழ்வு என்றாலும், ஆன்டிபயாடிக் எதிர்ப்பின் தன்மை ஒரு நாட்டிலிருந்து மற்றொரு நாட்டுக்கு பரவலாக வேறுபடுகிறது. ஆன்டிபயாடிக் எதிர்ப்பை அங்கீகரிப்பது, குறைப்பது, நிர்வகிப்பது ஆகியவை ஜெம் மருத்துவமனைகளில் தொற்றுக் கட்டுப்பாட்டுத் திட்டத்தின் ஒரு முக்கிய அம்சமாகும். ஆன்டிபயாடிக் ஸ்டூவர்ட்ஷிப் திட்டத்தை நாங்கள் பின்பற்றிவருகிறோம். இதில் ஆன்டிபயாடிக் மருந்து, மருந்தின் அளவு மற்றும் சரியான தன்மை ஆகியவை உறுதியாகக் கண்காணிக்கப்பட்டு, மிகுந்த கவனத்துடன் பின்பற்றப்படுகின்றன. ஜெம் மருத்துவமனைகள் நுண்ணுயிர் எதிர்ப்பிகளைப் பயன்படுத்துவதற்கான கடுமையான வழிகாட்டுதல்களையும், நுண்ணுயிர் எதிர்ப்பிகளின் பயன்பாட்டைக் கண்காணிப்பதற்கான நடைமுறைகளையும் தவறாமல் பின்பற்றுகின்றன.

(தொடர்ந்து அறிவோம்)

பதற்றம் போக்கும் யோகா!

செரிமான ஆரோக்கியம் காக்கும்



பின்வரும் பயிற்சிகள் மன அழுத்தத்தைக் குறைக்கவும், அடிவயிற்றிலிருந்து பதற்ற உணர்வை வெளியேற்றவும், பொது செரிமான ஆரோக்கியத்தைக் காக்கவும் உதவும். இவை உங்களுக்கு ஐபிஎஸ் வயிற்றுக் கோளாறுகளின் அறிகுறிகளின்போது ஏற்படும் அசௌகரியத்தை எளிதாக்கும். அதோடு, எதிர்காலப் பிரச்னைகளைத் தடுக்க உதவும்.

இந்தப் பயிற்சி வரிசையை நீங்கள் சுயமாகவே பயிற்சி செய்யலாம். அல்லது யோகா பயிற்றுநரின் வழிகாட்டுதலைப் பெற்றும் செய்யலாம். நீங்கள் ஒவ்வொரு தோரணையை வைத்திருக்கும்போது, உங்கள் உடல் மற்றும் சுவாசத்தின் உணர்வுகளுடன் இருக்கவும். தோரணைகளை ஒருமைப்பாட்டுடன் வைத்திருக்கத் தேவையான குறைந்தபட்ச முயற்சியைப் பயன்படுத்தவும். உடல் முழுவதும் தேவையற்ற பதற்றத்தை விடுவிக்க ஒவ்வொரு போஸிலும் உங்களுக்கு நீங்களே நினைவூட்டுங்கள்.

பரிகாசனா (கேட் போஸ்)

முழங்காலில் இருந்து, உங்கள் வலது காலை வலப்புறமாக நீட்டவும். குதிகால் தரையில் பட்டு, கால் தட்டையாகவும், கால்விரல்கள் தரையை அடையவும் செய்யவும். மூச்சை உள்ளிழுத்து, உங்கள் இடது கையை மேலே உயர்த்தவும். இப்போது மூச்சை வெளியேற்றி, உங்கள் உடற்பகுதியை வலது காலின் மேல் சாய்க்கவும். உங்கள் வலது கையை உங்கள் தாடையில் வைக்கவும். பின்னர் இடது கையை நோக்கிச் செல்லவும். இந்தச் சைகை உங்கள் உடலின் இடது பக்கத்தில் நீட்சியை எவ்வாறு அதிகரிக்கிறது என்பதைக் கவனியுங்கள். இடது விலா எலும்புக் கூண்டு, இடுப்பு மற்றும் வயிற்றில் சுவாசத்தை உணருங்கள். தலை மற்றும் கழுத்துக்கான நிலையைத் தேர்வுசெய்து, உங்கள் முகத்தை நிதானப்படுத்தவும், உங்கள் நெற்றி, கண்கள், வாய் மற்றும் தாடையை மென்மையாக்கவும்.



5 முதல் 10 சுவாசங்களுக்கு படத்தில் காட்டப்பட்டுள்ள இதே போஸில் இருங்கள். பிறகு மீண்டும் செய்யவும். இதே தோரணையை இருபுறமும் பயிற்சி செய்த பிறகு, முழங்காலுக்குத் திரும்பவும். உங்கள் பக்க விலா எலும்புகளில் உங்கள் கைகளை வைத்து, உங்கள் கைகளின் கீழ் சுவாசத்தின் இயக்கத்தை உணருங்கள். பொறுமையாகவும் முழுமையாகவும் மூச்சை உள்ளிழுத்து வெளிவிடவும். அப்போது உங்கள் விலா எலும்புக் கூண்டு விரிவடைந்து சுருங்கட்டும்.

அர்த்த மத்ஸ்யேந்திரசனா (அரை அமர்ந்துள்ள முதுகுத்தண்டு)

உட்கார்ந்த நிலையில் வந்து, உங்கள் இடது காலை நீட்டி, உங்கள் வலது காலை மேலே கடக்கவும், உங்கள் இடது முழங்காலுக்கு அடுத்ததாகத் தரையில் பாதத்தைத் தட்டையாக வைக்கவும். பின்னர் உங்கள் இடது முழங்காலை வளைத்து, இடது பாதத்தை வலது இடுப்புக்கு வெளியே கொண்டு வாருங்கள். இரு இடுப்பிலும் சமமாக உட்கார்ந்து உங்கள் முதுகுத்தண்டு வழியாக நீட்டவும். மெதுவாக உங்கள் உடற்பகுதியை வலது காலை நோக்கித் திருப்பவும். உங்கள் இடது கையால் வலது முழங்காலை அணைத்துக்கொள்ளலாம். அல்லது இடது முழங்கையை வலது தொடையின் குறுக்கே



கொண்டுவந்து, மேல் கையின் மேல் தொடையில் அழுத்தவும். நீங்கள் மூச்சை வெளியேற்றும்போது, மெதுவாக உங்கள் தொப்புளை உங்கள் முதுகெலும்பை நோக்கி இழுக்கவும், மூச்சை சீராக வெளியே அழுத்தவும். ஒவ்வொரு மூச்சை வெளியேற்றும்போதும் நீங்கள் இன்னும் கொஞ்சம் திருப்பலாம், ஆனால்,



கட்டாயப்படுத்தவோ கஷ்டப்படுத்தவோ வேண்டாம்.

இந்தத்திருப்பத்தைமிகவும்அழுத்தமாகஉணர்ந்தால், மேல் காலில் இருந்து விலகி, உங்கள் இடதுபுறத்தில் எதிர்த்திசையில் திருப்ப முயற்சிக்கவும். போஸின் இந்த நிலை வயிறு ஓய்வெடுக்கவும் சுவாசிக்கவும் இன்னும் கொஞ்சம் இடத்தை அளிக்கிறது.

5 முதல் 10 சுவாசங்கள் வரை பிடித்து, பின்னர் பக்கங்களை மாற்றவும்.

சாய்ந்த வயிறு முறுக்கு

இரண்டு கால்களையும் நேராக வைத்து உங்கள் முதுகில் படுத்துக்கொள்ளுங்கள். நீங்கள் மூச்சை வெளியேற்றும்போது, உங்கள் வலது காலை வளைத்து, அதை உங்கள் வயிற்றில் கட்டிக்கொள்ளுங்கள். ஓரிரு சுவாசங்களுக்கு இங்கே இடைநிறுத்தவும். பின்னர் உங்கள் உடலின் குறுக்கே வலது காலை எடுத்து, உங்கள் வெளிப்புற இடது தொடை மற்றும் இடுப்புக்கு அருகில் உருட்டவும். உங்கள் வலது கையைப் பின்னால் கொண்டு செல்லவும். தோள்பட்டையிலிருந்து நேராக வெளியே நீட்டி, உள்ளங்கையை உயர்த்தவும். உங்கள் வலது தோள்பட்டை தரையில் இருந்து வரட்டும். இதனால் தோரணையின் சுழல் உங்கள் இடுப்பு, முதுகெலும்பு, விலா எலும்புகள் மற்றும் மார்பு வழியாக உங்கள் கால்களிலிருந்து நகரும். இந்த போஸை மிகவும் தீவிரமாக உணர்ந்தால், வலது முழங்கால் மற்றும்/அல்லது வலது கையின் கீழ் ஒரு போர்வை அல்லது ஏதேனும் ஆதரவுப் பொருளை வைக்கலாம். நீங்கள் இதே போஸில் ஓய்வெடுக்கும்போது, கீழ் வயிறு, பக்க இடுப்பு, மார்பு ஆகியவற்றை உள்ளிருந்து வெளியே இழுத்து சுவாசத்தை உணருங்கள்.

5 முதல் 10 சுவாசங்களை இழுத்துக் கொள்ளுங்கள், பின்னர் உங்கள் முதுகில் படுத்துக்கொள்ளுங்கள். இதேபோல உங்கள் இடது பக்கத்தில் மீண்டும் செய்யவும்.

நன்றி: Yoga International

வளர்ந்து வரும் புதுமைகளின் மையமான இந்தியா, பல்துறைகளிலும் புதிய புரட்சியை ஏற்படுத்தி வருகிறது. அண்மைக்காலப் போக்குகளுக்கு ஏற்ப உருவாகிவரும் புதிய தொடக்கங்கள் மற்றும் தொழில்களுடன் (ஸ்டார் அப் நிறுவனங்கள்) தொழில்நுட்ப முன்னேற்றமும் சவாரி செய்கிறது. விவசாயம் மற்றும் சுகாதாரம் முதல் ஃபின்டெக் மற்றும் கல்வி வரையிலான பல்வேறு புதிய பயன்பாடுகள் (ஆப்ஸ்), இந்தியாவின் தகவமைப்பு மற்றும் எதிர்காலத்திற்கான தயார்நிலையைக் காட்டுகிறது.

செயற்கை நுண்ணறிவு மற்றும் இயந்திரக் கற்றல் | Artificial Intelligence (AI) and Machine Learning (ML)

AI மற்றும் ML ஆகியவை இந்தியாவில் பல்வேறு துறைகளிலும் ஊடுருவி, வணிகங்கள் மற்றும் செயல்பாடுகளைப் புதிய உயரத்துக்கு உயர்த்தியுள்ளன. பல ஸ்டார்ட்அப்கள் கடன் மதிப்பீடுகளை வழங்க AI எனும் செயற்கைநுண்ணறிவுநுட்பங்களைப்பயன்படுத்துகின்றன. அதே நேரத்தில் பல ஹெல்த்கேர் முயற்சிகள் தன்னியக்க மருத்துவ இமேஜிங் கண்டறிதல்களுக்கு இயந்திரக் கற்றல் (ML) நுட்பங்களைப் பயன்படுத்துகின்றன. AIக்கு என்றே அர்ப்பணிக்கப்பட்ட ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு மையங்களில் முதலீடு செய்வதன் மூலம் இந்திய அரசு இந்த வளர்ச்சியை ஊக்குவிக்கிறது.

Blockchain மற்றும் Cryptocurrency

ஒழுங்குமுறைத் தடைகளும் சில பிரச்னைகளும் இருந்தபோதிலும், பிளாக்செயின் தொழில்நுட்பம் மற்றும் கிரிப்டோகரன்சிகளை ஏற்றுக்கொள்வது அதிகரித்து வருகிறது. WazirX, CoinDCX மற்றும் ZebPay ஆகியவை கிரிப்டோகரன்சி வர்த்தகத்தைப் பிரதான நீரோட்டத்துக்குக் கொண்டு வந்துள்ளன. விவசாயிகளுக்கு நியாயமான இழப்பீடு வழங்குவதை உறுதிசெய்து, விநியோகச் சங்கிலியில் வெளிப்படைத்தன்மை ஏற்படுத்துவதற்காக விவசாயத் துறையும் பிளாக்செயினை ஆராய்ந்து வருகிறது.

5G தொழில்நுட்பம்


இந்தியா 5G புரட்சிக்குத் தயாராகி வருகிறது. 2024–ம் ஆண்டில் இது வணிக ரீதியாக வெற்றி பெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ரிலையன்ஸ் ஜியோ, பார்தி ஏர்டெல் போன்ற நிறுவனங்கள் 5G உள்கட்டமைப்பில் தீவிரமாக முதலீடு செய்கின்றன. இந்தத் தொழில்நுட்பப் பாய்ச்சல் இணைய வேகம் முதல் சுகாதாரம், கல்வி போன்ற துறைகளில் ரிமோட் செயல்பாடுகளின் செயல்திறன் வரை அனைத்தையும் அதிகரிக்க உறுதியளிக்கிறது.

எஜுடெக் வெடிப்பு

கோவிட்–19 தொற்றுநோயால் தூண்டப்பட்ட எஜுடெக் துறை அபரிமிதமான வளர்ச்சியைக் கண்டுள்ளது. BYJU, Uncademy மற்றும் Vedantu போன்ற தளங்கள் ஆன்லைன் படிப்புகளை வழங்குகின்றன, நாடு முழுவதும் கல்விக்கான அணுகலை இவை ஜனநாயகப்படுத்துகின்றன. டிஜிட்டல் இந்தியா திட்டங்கள் மூலம் தொலைதூரக் கிராமங்களும் இணைக்கப்பட்டு, அனைவருக்கும் தரமான கல்வி கிடைக்கக்கூடிய வாய்ப்பு பிரகாசமாகி வருகிறது.

HealthTech கண்டுபிடிப்புகள்

டெலிமெடிசின் மற்றும் ஹெல்த்டெக் ஸ்டார்ட்அப்கள் இந்தியாவில் ஹெல்த்கேர் டெலிவரி முறையையே





டெலிமெடிசின் மற்றும் ஹெல்த்டெக் ஸ்டார்ட்அப்கள் இந்தியாவில் ஹெல்த்கேர் டெலிவரியை மாற்றுகின்றன. இதனால் ஆலோசனைகள், நோய் கண்டறிதல், மருந்து வாங்குதல் ஆகியவற்றை இப்போது ஒருவர் வீட்டிலிருந்தபடியே செய்ய முடியும்!

மாற்றியமைக்கின்றன. Practo, 1mg போன்ற இயங்குதளங்கள் மருத்துவ ஆலோசனைகள், நோய் கண்டறிதல் மற்றும் மருந்து விநியோகம் ஆகியவற்றை ஒருவரின் வீட்டிலிருந்து அணுகக்கூடியதாக ஆக்குகின்றன. கையடக்கக் கண்டறியும் சாதனங்கள் மற்றும் AI வாயிலாக இயக்கப்படும் கண்காணிப்பு கண்டுபிடிப்புகள், சுகாதாரப் பாதுகாப்பை மேலும் தனிப்பயனாக்கி, உடனடியாகக் கிடைக்கக்கூடியதாக மாற்றுகின்றன.

எலக்ட்ரிக் மொபிலிட்டி மற்றும் கிரீன் டெக்

சுற்றுச்சூழல் மற்றும் நிலைத்தன்மைக்கு அதிக முக்கியத்துவம் கொடுப்பதால், ஓலா எலக்ட்ரிக், ஏதர் எனர்ஜி போன்ற எலக்ட்ரிக் மொபிலிட்டி ஸ்டார்ட்அப்கள் முன்னணியில் உள்ளன. FAME II போன்ற திட்டங்களுடன் மின்சார வாகனங்களுக்கான (EVs) இந்திய அரசாங்கத்தின் உந்துதல் EV உள்கட்டமைப்பில் முதலீட்டைத் தூண்டியுள்ளது. பசுமைத் தொழில்நுட்ப முன்முயற்சிகள் சூரிய ஆற்றலிலும் பரவியுள்ளன, ZunRoof போன்ற நிறுவனங்கள் சோலார் அமைப்புகளை வீடுகளுக்கு எளிதில் கிடைக்கக்கூடியதாக ஆக்குகின்றன.

அக்ரிடெக் பரிணாமம்

இந்தியாவின் முதுகெலும்பான விவசாயமும் தொழில்நுட்பமாற்றத்திற்கு உட்படுத்தப்படுகிறது. AgroStar, CropIn போன்ற ஸ்டார்ட்அப்கள் விவசாய நடைமுறைகளை மேம்படுத்த தரவுப் பகுப்பாய்வு மற்றும் AI நுட்பத்தைப் பயன்படுத்துகின்றன. பயிர்க் கண்காணிப்புக்கான ட்ரோன்கள், துல்லியமான விவசாயத்திற்கான IoT சாதனங்கள் போன்றவை குறிப்பிடத்தக்க வேகத்தில் பலராலும் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன.

விண்வெளித் தொழில்நுட்ப விருப்பங்கள்

விண்வெளி தொழில்நுட்பத்தில் இந்தியா குறிப்பிடத்தக்க முன்னேற்றம் கண்டுள்ளது. இஸ்ரோவின் ககன்யான் மற்றும் ஸ்கைரூட் ஏரோஸ்பேஸ் போன்ற ஸ்டார்ட்அப்கள் இந்தியாவின் விண்வெளி லட்சியங்களை நோக்கிச் செல்கின்றன. செயற்கைக்கோள் ஏவுதல் மற்றும் விண்வெளி ஆய்வுகளுக்குச் செலவு குறைந்த தீர்வுகளை இதுபோன்ற நிறுவனங்கள் உருவாக்கி வருகின்றன.

FinTech Flourish

2016 பணமதிப்பிழப்புநடவடிக்கை ஏதோ ஒருவகையில் இந்தியாவில் ஃபின்டெக் பயன்பாட்டுக்கு ஓர் ஊக்கியாகச் செயல்பட்டது. Paytm, Google Pay, PhonePe போன்ற செயலிகளால் (ஆப்) வழிநடத்தப்படும் UPI மூலம் டிஜிட்டல் பணப் பரிவர்த்தனைகளை மாற்றியுள்ளன. FinTech ஸ்டார்ட்அப்கள் பாதுகாப்பான, சிக்கல்கள் இல்லாத நிதிச் சேவைகளுக்காக AI மற்றும் பிளாக்செயினை ஆராய்ந்து வருகின்றன.

சமூக வர்த்தகம் மற்றும் இ-காமர்ஸ் கண்டுபிடிப்புகள்

மீஷோ மற்றும் க்ளோரோட் போன்ற ஸ்டார்ட்அப்கள் சமூக வர்த்தக முறையை ஊக்குவித்து, சமூக ஊடகங்கள் மற்றும் ஆன்லைன் ஷாப்பிங்கை ஒருங்கிணைத்து வருகின்றன. இந்த பிசினஸ் மாடல் சிறு தொழில்முனைவோரும் உள்ளூர் கைவினைஞர்களும் அதிக அளவு பார்வையாளர்களிடம் சென்றடைய உதவுகிறது.

தொழில்கள் மீதான தாக்கம்

இந்தத் தொழில்நுட்பப் போக்குகளின் விளைவு ஆழமானது; ஆச்சரியம் அளிக்கக்கூடியது. பாரம்பரியத் துறைகள்கூட டிஜிட்டல் பயன்பாடு காரணமாக மறுவரையறை செய்யப்படுகின்றன, இது அதிகரித்த செயல்திறன் மற்றும் உள்ளடக்கத்துக்கு வழிவகுக்கிறது. புதிய தொழில்களின் தோற்றம் பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிப்பதோடு, புதிய வேலைவாய்ப்புகளையும் உருவாக்கியுள்ளது.

இது ஒரு டிஜிட்டல் சிம்பொனி

பாரம்பரியத்தோடு நவீனத்துவத்தையும் தொழில்நுட்பத்தையும் இணைக்கும் புதிய பாதையில் பயணிக்கிறது இந்தியா. புதிய கண்டுபிடிப்புகளை ஏற்றுக்கொள்வதில், இந்தியா உலகளாவிய தொழில்நுட்ப பந்தயத்தில் தன் வேகத்தைத் தக்கவைத்துக்கொள்கிறது. அதோடு, அதன் தனித்துவமான மக்கள்தொகைக்கு ஏற்ப ஒரு முக்கிய இடத்தையும் செதுக்குகிறது. ●

உங்களைக் கண்ணாடியில் பார்க்கப் பிடிக்கவில்லையா?

உங்களை நீங்களே கண்ணாடியில் பார்க்கப் பிடிக்கவில்லையா? அப்படியானால் அந்த எதிர்மறை சுய–பிம்பத்தைக் கட்டுக்குள் வைக்க வேண்டிய நேரம் இது.

ஆஸ்கார் வைல்டு எழுதிய 'தி பிக்சர் ஆஃப் டோரியன் கிரே' நாவலில் டோரியன் என்றென்றும் இளமையாக இருப்பதற்காக ஒரு பிசாசுடன் ஒப்பந்தம் செய்கிறார். அதன்படி, அவரது உண்மையான வயதைக் காட்டுவது அவரது மாடியில் வைத்திருக்கும் ஓர் உருவப்படம் மட்டுமே.

டோரியனைப் போல, நாம் ஒருபோதும் பிசாசுடன் ஒப்பந்தம் செய்துகொள்ள முடியாது. நம் அறைகளில் வயதான உருவப்படம் இல்லை. ஆனால், நம் இளமையின் வீணான வாய்ப்புகளை நினைவூட்டுவதற்காகச் சில பழைய பொருள்களை நாம் ஒவ்வொருவரும் வைத்திருக்கக்கூடும்!



நாம் 20 வயதில் இருக்கும்போது என்ன செய்தோம்? நினைவிருக்கிறதா? இப்போது நினைத்துப் பார்த்தால் அவற்றையெல்லாம் செய்திருக்கவே கூடாது என்றுகூடச் சிலருக்குத் தோன்றும்.

சரி விட்டுத் தள்ளுங்கள்... பல வருடப் பின்னோக்கிய ஞானம் அது. கால இயந்திரச் சவாரிகள் நமக்கு வாய்க்காது என்பதால் அதை இப்போது மாற்ற முடியாது. ஆகவே, இக்கணத்தில் வாழ்வோமே!

உங்கள் இளமையை வீணாக்காதீர்கள்!

உங்கள் உடலின் ஒரு பகுதியை (குறிப்பாகத் தொப்பையை, வழுக்கையை, சருமத்தை) மறைப்பதற்காக நீங்கள் என்ன செய்கிறீர்கள்? அதற்கேற்ப உடைகளைத் தேர்வுசெய்வது பலரது வழக்கம். புகைப்படங்கள் எடுக்கப்படும்போது வயிற்றைப் பின்னே தள்ளுவது இன்னும் பலரின் பழக்கம். உங்கள் உடலைப் பற்றி நீங்கள் எப்படி உணர விரும்புகிறீர்கள் என்பதிலிருந்து தொடங்குவோம். உங்கள் உடலில் என்ன மாற்றம் ஏற்பட்டாலும், உங்களுக்கு வயதாகி வருகிறது என்பதுதான் உண்மை. இது தவிர்க்க முடியாதது. ஆனால், எந்த வயதிலும் நீங்கள் நம்பிக்கையுடனும் கம்பீரத்துடனும் இருக்க முடியும். இங்கே வாருங்கள்...

1. நீங்கள் இளமையாக இருந்தபோது உங்கள் உடல் மீது நீங்கள் முன்வைத்த விமர்சனங்களை மீண்டும் நினைத்துப் பாருங்கள். நீங்கள் திரும்பிச் சென்று உங்கள் இளையவருக்கு என்ன சொல்ல விரும்புகிறீர்கள்?

2. உங்களை நேசிக்கும் ஒருவரை நினைத்துப் பாருங்கள். அவர்கள் உங்கள் தோற்றத்தை எப்படி விவரிப்பார்கள் என்று நினைக்கிறீர்கள்?

3. உங்கள் உடலை நீங்கள் நடத்தும் விதத்தை மேம்படுத்த என்னென்ன விஷயங்களைச் செய்யலாம்?

உங்கள் வயது எதுவாக இருந்தாலும், எதிர்மறையான விஷயங்களில் கவனம் செலுத்துவது மிகத் தவறு. உங்கள் மீதே நீங்கள் அதிருப்தி காட்டுவதால் எந்தப் பலனும் இல்லை. ஏன் தெரியுமா? இன்னும் பத்தாண்டுகளில் நீங்கள் இன்று இருக்கும் முகத்தையோ, உடலையோ திரும்பிப் பார்ப்பீர்கள். நீங்கள் அதை வைத்திருந்தபோது ஏன் பாராட்டவில்லை என்று ஆச்சரியப்படுவீர்கள். ஏனெனில் இதுதான் உங்கள் இளமையிலும் நடந்தது.

உங்கள் உடலையும் சற்று மதியுங்கள்!

உங்கள் உடலைப் பற்றி நீங்கள் பேசும்போது நீங்கள் பயன்படுத்தும் மொழியையும், நீங்கள் வைத்திருக்கும் எண்ணங்களையும் கூர்ந்து கவனிக்கவும்.

சில மாதங்களாகப் பார்க்காத ஒரு நண்பரை நான் சந்தித்தேன். நாங்கள் சிறிது நேரம் அரட்டையடித்த பிறகு, 'நான் மிகவும் குண்டாக இருக்கிறேன். நான் அருவருப்பாக உணர்கிறேன்' என்று குறிப்பிட்டார். அந்த அழகான பெண்



நம் அனைவருக்கும் நல்ல நாட்கள் மற்றும் கெட்ட நாட்கள், பருமனாக இருக்கும் நாட்கள் மற்றும் ஒல்லியாக இருக்கும் நாட்கள் உள்ளன. ஆகவே, புலம்ப வேண்டாம். அதனால் எந்தப் பலனும் இல்லை!

தான் விரும்பியதைவிடச் சற்று பருமனாக இருந்தார். ஆனால், அது தன்னையே வெறுக்கும் அளவுக்கான பருமன் எனும் நோயல்ல. இருப்பினும் அவர் தன்னைப் பற்றி மிகவும் விரோதமான முறையில் பேசினார்.

உங்கள் உடலுடனான உங்கள் உறவு உங்கள் வாழ்க்கையில் உள்ள மற்ற முக்கியமான உறவுகளிலிருந்து வேறுபட்டதல்ல. நீங்கள் அதைச் சிறப்பிக்க விரும்பினால் அதை ஏற்றுக்கொண்டு மரியாதையுடன் இருக்க வேண்டும்.

ஒவ்வோர் உடலையும் மதியுங்கள்

உங்களைப் பற்றிச் சிந்தித்து எதிர்மறையை நீக்குங்கள். சொந்த உடல் மரியாதையுடன், மற்றவர்களின் உடலுக்கும் மரியாதை காட்டுங்கள். உடல் ரீதியான விமர்சங்கள் நிச்சயம் தவறுதானே?

வேறொருவரின் உடலைப் பற்றி ஒவ்வொரு முறையும் தீர்ப்பளிப்பது நம் வேலை அல்லவே. அப்படிச் செய்தால் உங்கள் ஆழ்மனத்தில் அதே விஷயம் உங்கள் மீதும் நிலைநிறுத்தப்படலாம்!

மாற்றம் பற்றித் தெளிவாக இருங்கள்

உங்கள் தோற்றத்தின் ஒரு பகுதியை நீங்கள் மாற்றினால், உங்களின் ஒரு பகுதியே மாறுகிறது. சைஸ் ஜீரோவுக்குச் செல்வது மட்டுமே உங்கள் வாழ்க்கையைச் சரியானதாக மாற்றிவிடாது. சிக்ஸ்பேக்கை உருவாக்கவோ அல்லது புதிய மார்பகங்களை வாங்கவோ முடியாது. உங்கள் உடல் உங்களுடையது. நீங்கள் அதனுடன் சுதந்திரமாக இருக்கிறீர்கள். வயது உங்கள் வாழ்க்கையில் ஏற்படுத்தும் தாக்கத்தை மிகைப்படுத்திப் பார்க்க வேண்டாம். அதை இயல்பாக ஏற்றுக்கொள்ளுங்கள்.

உங்களை நீங்கள் எப்படிப் பார்க்கிறீர்கள்?

மீடியா அல்லது ஆன்லைனில் நீங்கள் பார்ப்பவர்களுடன் ஒருபோதும் உங்கள் தோற்றத்தை ஒப்பிடாதீர்கள்.

உங்கள் கண்ணாடியில் நீங்கள் பார்ப்பதை மறந்துவிடுங்கள். உங்களை நேசிக்கும் ஒருவரின் கண்களால் உங்களைப் பார்ப்பதுதான் சிறந்த வழி!

தழும்புகளும் அழகாக இருக்கும்!

உங்கள் தழும்புகளைப் பார்த்து அவற்றை மறையச் செய்ய வேண்டும் என்று ஆசைப்படுவதற்குப் பதிலாக, ஒவ்வொரு வடுவும் இருப்பதை உணருங்கள். அது எப்படி வந்தது என்பதே ஒரு கொண்டாட்டம்தான்.

ஒருவேளை நீங்கள் உலகுக்கு ஓர் உயிரைக் கொண்டு வந்திருக்கலாம். அப்போது வயிற்றில் தழும்பு ஏற்பட்டிருக்கலாம். அல்லது பள்ளி, கல்லூரி விளையாட்டின்போது ஏற்பட்ட காயம் காரணமாக அது ஏற்பட்டிருக்கலாம். காரணம் எதுவாக இருந்தாலும், உங்கள் வடுக்கள் அழகாக இருக்கின்றன என்பதை நினைவூட்டுங்கள். நீங்கள் உயிர் பிழைத்திருப்பதற்கான ஆதாரம் அவை.

உங்கள் உடலுக்குச் சவால் விடுங்கள்!

நீண்ட காலம் (70+ வயதுகள்) வாழும் சமூகங்களுக்கு இரண்டு பொதுவான விஷயங்கள் உள்ளன. அது என்ன ரகசியம்?

முதலாவதாக, அவர்கள் வயது மதிக்கப்படும் சமூகங்களில் வாழ்கிறார்கள். அவர்களுக்கு வயதாகும்போது, அதிகமான மக்கள் அவர்களைப் பார்த்து அவர்களின் ஞானத்தைப் பாராட்டுகிறார்கள்; பின்பற்றுகிறார்கள்.

இரண்டாவதாக, அவர்கள் மிகவும் சுறுசுறுப்பாக இருக்கிறார்கள். அவர்கள் எதையும் விட்டுக்கொடுக்கத் தங்கள் வயதை ஒரு சாக்காகப் பயன்படுத்துவதில்லை. அவர்கள் இன்னும் மலைகளில் ஏறுகிறார்கள், வயல்களில் வேலை செய்கிறார்கள், பல மைல் தூரம் நடந்து செல்கிறார்கள்.

ஆம்... இதுபோல உடல்ரீதியான சவாலை நீங்களே அமைத்துக்கொள்ளுங்கள். அதில் ஆர்வத்துடன் ஈடுபடுங்கள். இன்னும் நீங்கள் என்ன செய்ய முடியும் என யோசித்து அவற்றில் உங்களை ஈடுபடுத்துங்கள்.

21 வயதில் நீங்கள் செய்ய முடிந்த அதே விஷயங்களை இன்று உங்களால் செய்ய முடியாமல் போகலாம். ஆனால், நீங்களே வியக்கக்கூடிய சில விஷயங்களை நிச்சயம் உங்களால் செய்ய முடியும். அது நிச்சயம்! ●

மெழுகுவர்த்தி முதல் பல்லாங்குழி வரை!



மழைக் காலத்தைத் தொடர்ந்து குளிர்காலம் அதன் இனிமையான வசீகரத்துடன் நம் வீட்டுக்கு வருகிறது. உலகின் பல பகுதிகளுடன் ஒப்பிடும்போது இங்கு குளிர்காலம் மிதமானதாக இருந்தாலும், வெப்பநிலையின் திடீர் சரிவும் குளிர்ந்த காற்றும் ஒருவிதப் புதிய உணர்வை ஏற்படுத்துகிறது. நம் வாழ்விடங்கள் வசதியாக இருப்பதை உறுதிசெய்வது, பருவகால அனுபவத்தை மேம்படுத்தும். இங்கு அளிக்கப்படும் குளிர்காலப் பராமரிப்புக் குறிப்புகளைப் பின்பற்றுவது உங்கள் இல்லத்தை இனிமையாக்க உதவும்.

திரைச்சீலைகள்

தடிமனான திரைச்சீலைகள் இரட்டை நோக்கத்துக்கு உதவும். அவை பகலில் சூரிய ஒளியை அனுமதிக்கின்றன, உட்புறத்தை இயற்கையாகவே வெதுவெதுப்பாக வைத்திருக்கின்றன, மாலையில் அவை குளிர்ந்த இரவுக் காற்றிலிருந்து நம்மைப் பாதுகாக்கின்றன.

காற்றோட்டம்

வீடுகள் நன்கு காற்றோட்டமாக இருப்பதை உறுதி செய்வது முக்கியம். அதோடு, சமையலறை மற்றும் குளியலறைகளில் ஈரப்பதத்தைத் தவிர்க்கவும். அங்கு புதிய காற்று ஓட்டத்தை உறுதி செய்யவும்.

வெதுவெதுப்பான நிறங்கள்

வீட்டு அலங்காரத்தில் ஆரஞ்சு, சிவப்பு, மஞ்சள் போன்ற சூடான வண்ணங்களைச் சேர்ப்பது சூழலை இதமாக்கும். இதே நிறங்களை மெத்தைகள், விரிப்புகள், சுவர் தொங்கல்களிலும் பயன்படுத்தலாம்.

விளக்குகள்


விளக்குகளும் மெழுகுவர்த்திகளும் ஓர் இனிமையான வரவேற்பு உணர்வை அளிக்கும். பாரம்பரிய பித்தளை விளக்குகளைக் கொண்டு பக்தி உணர்வைப் பெறலாம்.

